செ.வெ.எண்: 63 நாள்: 31.10.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31-10-2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியான "இந்திய நாட்டின் பொதுப்பணியாளர்களாகிய நாம், நமது நடவடிக்கைகள் சார்ந்த எல்லாத்துறைகளிலும் நேர்மையும், ஒளிவுமறைவற்ற தன்மையும் இடம் பெறுவதற்கு தொடர்ந்து அயராது பாடுபடுவோம் என்று இதனால் உளமாற உறுதி கூறுவோம். ஊழலை அறவே ஒழித்திட நாம் வாழ்வில் இடையறாது முயல்வோம் எனவும் உறுதி கூறுவோம். நாம் விழிப்புடன் நமது அமைப்பின் முன்னேற்றம் மற்றும் நற்பெயருக்காக பணியாற்றுவோம். ஒன்றுபட்டு நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் வாயிலாக, நமது அரசுக்குப் பெருமை சேர்ப்பதுடன் நமது நாட்டு மக்களுக்கு உயர் நெறிகளின் அடிப்படையிலான சேவைகள் புரிவோம். எவ்வித அச்சமும், தயவுமின்றி நம் மனசாட்சி காட்டும் நெறியின்படி நமது கடமையை ஆற்றுவோம்" என வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**